| அனுப்புநர் | பெறுநர் |
|---|---|
| ந.லதா,<br>அரசுத் தேர்வுகள் இயக்குநர்,<br>சென்னை – 600 006. | அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்,<br>இணை இயக்குநர் (கல்வி), புதுச்சேரி. |

ந.க.எண். 004517 /எப்.1/2025 நாள்: 16. 05.2025

ஐயா/அம்மையீர்,

பொருள் : அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை–6 – மார்ச் 2025, மேல்நிலை முதலாமாண்டு பொதுத் தேர்வு – மதிப்பெண் பட்டியலை (Statement of Marks) மாணவர்களுக்கு விநியோகித்தல் – தொடர்பாக.

பார்வை: இவ்வலுவலக செய்திக் குறிப்பு நாள். 16.05.2025.

*****

16.05.2025 அன்று மேல்நிலை முதலாமாண்டு பொதுத் தேர்வுக்கான முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து 19.05.2025 பிற்பகல் 2.00 **மணி** முதல் www.dge.tn.gov.in என்ற இணையதள முகவரியிலிருந்து அனைத்து மேல்நிலை பள்ளித் தலைமையாசிரியர்கள் தங்கள் பள்ளிகளுக்கென வழங்கப்பட்ட USER ID, PASSWORD–ஐக் கொண்டு தங்கள் பள்ளி மாணவர்களுக்கு உரிய மதிப்பெண் பட்டியலை (Statement of Marks) பதிவிறக்கம் செய்து, மாணவர்களுக்கு வழங்கவும்.

தனித்தேர்வர்கள் தங்களது பிறந்த தேதி, தேர்வெண் ஆகிய விவரங்களை உள்ளீடு செய்து www.dge.tn.gov.in என்ற இணையதளத்தில், உரிய மதிப்பெண் பட்டியலை (Statement of Marks) தாங்களே பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

<u>கூடுதல் அறிவுரைகள்:–</u>

- பள்ளித் தலைமை ஆசிரியர்கள் பதிவிறக்கம் செய்யப்படும் மதிப்பெண் பட்டியலை (Statement of Marks) சரிபார்த்து, அவற்றில் மாணவர் பெயர், பிறந்த தேதி, தலைப்பெழுத்து, புகைப்படம், பயிற்று மொழி ஆகியவற்றில் ஏதேனும் பிழைகள் இருப்பின், தலைமையாசிரியரே அத்திருத்தத்தை மேற்கொண்டு தயார் நிலையில் வைத்துக் கொள்ள வேண்டும்.

..2..

மேற்காண் அறிவுரைகளை அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்களும் தங்களது ஆளுகைக்குட்பட்ட அனைத்து மேல்நிலை பள்ளித் தலைமையாசிரியர்களுக்கும் அறிவுறுத்திடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். மேலும், அனைத்து மேல்நிலை பள்ளித் தலைமையாசிரியர்களும் தங்கள் பள்ளியில் மேல்நிலை முதலாமண்டு பயின்ற அனைத்து மாணவர்களுக்கும் தற்காலிக மதிப்பெண் பட்டியல் வழங்கப்பட்டதை உறுதி செய்ய வேண்டும்.

**ஒம்/–**
**இயக்குநர்**

**<u>நகல்:</u>**

1. அனைத்து மாவட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்கள்.
2. அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள்(இடைநிலை மற்றும் தனியார் பள்ளிகள்).
3. எப்4–பிரிவு (அலுவலகம்)